பெஸ்ஸி லெசினா, 35 | மே 14, வாரம் 7

போட்ஸ்வானா



# விருந்துகளா அல்லது தேவனா

பெஸ்ஸி ஒரு புதிய மனுஷியாக மாறியதை நம்புவதே பலருக்கு கடினமாக இருந்தது.

பெஸ்ஸி ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்குச் சென்றுவிட்டு திரும்பும் போதெல்லாம் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபை மூடிக் கிடப்பதைப் பார்ப்பாள். அந்தச் சபைக்கும் சென்று பார்க்க விரும்பியதால், மூடிக்கிடந்ததற்கான காரணத்தை யோசித்தாள்.

மத்திய போட்ஸ்வானா பகுதியில் வசிக்கிறாள். எனவே ஒரு நாள் எரிச்சலடைந்து, அந்த ஆலயத்தின் வளாகத்தின் அருகிலிருந்த ஒரு வீட்டின் முற்றத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபப் பெண்ணிடம் அதற்கான காரணத்தைக் கேட்டாள்.

“இந்த ஆலயம் எப்போது திறந்திருக்கும்? எப்போதும் பூட்டி தான் கிடக்குமா?” என்று கேட்டாள்.

“இது ஓர் அட்வென்டிஸ்ட் திருச்சபை. ஆனால் நீங்கள் அட்வென்டிஸ்டாக மாறமுடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. அட்வென்டிஸ்டாக இருப்பது கடினம்” என்று அந்தப் பெண் கூறினாள்.

“ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?” என்று பெஸ்ஸி கேட்டாள்.

அட்வென்டிஸ்டுகள் கேளிக்கை விருந்துகளுக்குச் செல்வதில்லை; நகைகள் அணிவதில்லை என்று அந்தப் பெண் சொன்னாள்.

“அவர்கள்சனிக்கிழமைகளில் தான் ஆராதனை செய்வார்கள்” என்றும் சொன்னாள்.

போட்ஸ்வானாவில் சனிக்கிழமைகளில்தான் வாலிபர்கள் கேளிக்கை விருந்துகளுக்குச் செல்வார்கள்.

கேளிக்கை விருந்துகளுக்குச்

செல்லாமலும், நகைகளை அணியாமலும் இருக்கமுடியாதென்று பெஸ்ஸி நினைத்தாள். 'இந்தச் சபையில் என்னால் ஆராதனை செய்ய முடியாது' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

பெஸ்ஸியின் குடும்பத்தினர் கிறிஸ்தவர்கள் கிடையாது. அவர்களுக்கு தேவனைப்பற்றி அதிகம் தெரியாது. ஆனால் பள்ளிப் படிப்பு முடிந்து, பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு இடைபட்ட காலத்தில், நீண்ட நாட்கள் விடுமுறை இருந்தது. அப்போதுதான் ஒரு கிறிஸ்தவளாக மாறத் தீர்மானித்தாள். பல சபைகளுக்குச் சென்றாள். அந்தச் சமயத்தில்தான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட்திருச்சபைசனிக்கிழமைகளில் மூடிக்கிடந்ததைக் கவனித்தாள்.

இலையுதிர்காலத்தில், பெஸ்ஸி போட்ஸ்வானாவின் தலைநகரான கேபோரோனுக்கு, பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காகச் சென்றாள். அங்கு அவளுடன் தங்கியிருந்த ஸோலோஃபெலெங் எனும் மாணவி, புதன்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய நாட்களில் ஆலயத்திற்குச் சென்றதைக் கவனித்தாள். ஆனால் அதில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக, சனிக்கிழமைகளில் கேளிக்கை விருந்துகளுக்குச் சென்றாள். ஞாயிற்றுக்கிழமைகளில் ஏதாவது சபைகளுக்குச் செல்ல முயன்றாள். ஆனால் அவள் சென்ற சபைகளில் வேதாகமத்தைப் பயன்படுத்தவே இல்லை. எனவே, வேதாகமத்திலிருந்து ஒன்றுமே கற்றுக்கொள்ளவில்லை.

பலமாதங்கள் கழித்து, பெஸ்ஸி தன் அறைத்தோழியிடம், "வாரத்தில் மூன்று நாட்கள் நீ எந்தச் சபைக்குச் செல்கிறாய்?" என்று கேட்டாள்.

"செவந்த்-டேஅட்வென்டிஸ்ட் திருச்சபைக்குச் செல்கிறேன். அங்கு சனிக்கிழமைகளில்தான் ஆராதனை நடக்கும்" என்று அவள் சொன்னாள்.

அப்போதுதான் தன் அறைத்தோழி நகை ஏதும் அணியவில்லை என்பதை பெஸ்ஸி கவனித்தாள். அப்போதுதான் தன்னுடைய ஊரில் அந்த வாலிபப்பெண் சொன்ன செய்தியும், 'அந்தச் சபையில் என்னால் ஆராதிக்கமுடியாது' என்று இவள் யோசித்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயங்களுக்குச் சென்றாலும், நிம்மதியில்லை என்று அறிந்தபிறகு, அட்வென்டிஸ்ட் திருச்சபையாவது வித்தியாசமாக இருக்குமா என்று யோசிக்க ஆரம்பித்தாள். எனவே ஒருநாள் அங்கு செல்லத் தீர்மானித்தாள். ஆனால் சனிக்கிழமை செல்லக்கூடாது என்று முடிவெடுத்தாள்.

புதன்கிழமையில், ஸோலோஃபெலெங்குடன் சேர்ந்து பெஸ்ஸி சென்றாள். பல்கலைக்கழக வகுப்பறை ஒன்றில், அட்வென்டிஸ்ட் மாணவர்கள் ஆராதனைக்காகக் கூடியிருந்தார்கள். அங்கு திருமணம் பற்றி போதகர் பேசினார். அது பெஸ்ஸியை வெகுவாகக் கவர்ந்தது. தானும் திருமணம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள்.

திருமணம்பற்றி மீண்டும் பேசப்போவதை அறிந்து, தன்

அறைத்தோழியுடன் வெள்ளிக் கிழமை சாயங்காலத்திலும் சென் றாள். ஓய்வுநாள் காலையில், ஸோலோஃபெலெங்குடன் சேர்ந்து ஆலயத்திற்குச் சென்றாள். மதிய உணவுக்கு பிறகு, வேத வகுப்பில் கலந்துகொண்டாள். அன்றுமுதல், ஓய்வுநாட்களில் அவள் ஆலயத்திற் குச் செல்லாமல் இருந்ததே இல்லை.

பெஸ்ஸியின் வாழ்க்கை மாற ஆரம்பித்தது. நகைகளைக் கழற்று வதும், கேளிக்கை விருந்துகளுக் குச் செல்லாமல் இருப்பதும் அவ ளுக்கு கடினமாக இல்லை. ஜெபத் தின்மூலம் தேவனோடு பேசமுடி யும் என்று அறிந்துகொண்டாள். பெஸ்ஸி ஒரு புதிய மனுஷியாக மாறியதை நம்புவதே பலருக்கு கடினமாக இருந்தது. அவளிடம் பல கேள்விகளைக் கேட்டார்கள். அவள் தன் விசுவாசம்பற்றி அவர் களிடம் சந்தோஷமாகப் பகிர்ந்து கொண்டாள்.

அங்கு படித்து முடிப்பதற்கு முன்னரே பெஸ்ஸி ஞானஸ்நானம் பெற்றாள். அவள் தண்ணீரிலிருந்து எழுந்தபோது அவளுடைய அறைத் தோழி சந்தோஷத்தால் அழுதே விட்டாள்.

இன்று பெஸ்ஸிக்கு 35 வயதா கிறது. மூன்று குழந்தைகளுக்கு தாய். வட போட்ஸ்வானாவில் உள்ள உறைவிடப் பள்ளியான ஈஸ்டர்ன் கேட் அகாடமி என்கிற அட்வென் டிஸ்ட் உறைவிடப் பள்ளியில் ஆசி ரியையாகப் பணிபுரிகிறாள். அங்கு அவளுடைய கணவன் வணிக மேலா ளராக இருக்கிறார்.

தன் வாழ்க்கையில் தான் மாற்ற மடைந்ததுபோலவே, பல மாணவர் களுடைய வாழ்க்கை மாறிவருவதை கண்கூடாகப் பார்த்து வருகிறார்.

“சிலசமயங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கலகக்கார பிள்ளைகளாக வளர்க்கிறார்கள். ஆனால் இங்கு படித்து முடித்துச் செல்கிற மாணவர்கள் முற்றிலும் மாறிவிடுகிறார்கள். ‘எங்கள் பிள் ளைகள் மாறியிருக்கிறார்கள், உங் களுக்கு நன்றி’ என்று சொல்லுகிறார் கள்” என்று சொல்லுகிறார்.

ஈஸ்டர் கேட் அகாடமியும், ஈஸ் டர்ன் கேட் ஆரம்ப பள்ளியும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளன. 2017 ம் ஆண்டு ஜனவரி மாதம், ஒரு பதின் மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் அந்த ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கட்டது. பெஸியின் ஆறு வயது மகளான யோவனா அந்தப் பள்ளியில் படித்து வருகிறாள். இன் னும் அநேக பிள்ளைகளை அந்தப் பள்ளி தேவனிடம் வழிநடத்துவ தற்கு தான் ஜெபித்து வருவதாக வும் சொன்னார்.

## கதைக் குறிப்புகள்

- பெஸ்ஸியை யூட்யூப்பில் பார்ப்பதற்கு: bit.ly/Bessie-Lechina.
- முகநூலிலிருந்து படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: *bit.ly/sid-2022.*